இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 14-09-2024

# மீண்டும் மீண்டும் மணிப்பூர்!

'மீண்டும் மணிப்பூர்' என்று மீண்டும் மீண்டும் எத்தனை காலத்துக்கு சொல்லிக் கொண்டிருக்கப் போகிறோம் என்று தெரியவில்லை!

மணிப்பூரில் மீண்டும் வன்முறை தொடங்கி விட்டது என்ற செய்தி வந்த அதே நாளில், "ரஷ்யா – உக்ரைன் விவகாரத்தில் அறிவுரை வழங்க இந்தியா தயார்" என்று ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள், பெர்லினில் போய் சொல்லி இருக்கிறார். ரஷ்யா – உக்ரைன் போருக்குத் தீர்வு காண நம்பத்தகுந்த நாடுகளான இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் சொல்லி இருந்தது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இப்படிச் சொல்லி இருக்கிறார்.

**'கூரை ஏறி கோழி பிடிக்க முடியலையாம், வானம் ஏறி வைகுண்டம் காட்டுவாராம்' என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று.**

**மணிப்பூரில் இரு குழுவினருக்கு இடையிலான மோதலை ஓராண்டு காலமாக தீர்க்க முடியாதவர்கள் ரஷ்யா – உக்ரைன் என்று கிளம்பிவிட்டது வேதனையான வேடிக்கையாகும்.**

2023ஆம் ஆண்டு மே மாதம் மணிப்பூரில் இரு சமூகத்தினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. காங்போக்பி மாவட்டத்தில் இரண்டு குகி சமுதாயப் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டார்கள். அவர்களை நிர்வாணமாக்கி கலவரக்காரர்கள் அழைத்து வந்தார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதனை வேடிக்கை பார்த்தார்கள். படம் பிடித்தார்கள். இதை பொதுவெளியில் வெளியிட்டார்கள். இவை அனைத்தையும் மணிப்பூர் பா.ஜ.க. அரசு வேடிக்கை பார்த்தது. நூற்றுக்கணக்கானவர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளார்கள். வன்முறைகள் எழும், அடங்கும். எழும், அடங்கும். இதுதான் ஓராண்டு காலமாக நிலைமை ஆகும்.

**இந்த மாநிலத்துக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரே ஒரு முறை ஒப்புக்குப் போய்விட்டுத் திரும்பினார். பிரதமர் நரேந்திரமோடி போகவே இல்லை. நேரமில்லை!**

மணிப்பூரில் தொடங்கிய முதல் கலவரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரித்து குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளது. ஒரு சம்பவம் தொடர்பான குற்றப்பத்திரிக்கை மட்டுமே அது.

"2023 ஆம் ஆண்டு மே 4 ஆம் தேதி அந்த மாநிலத்தில் உள்ள காங்போக்பி மாவட்டத்தில் இரண்டு குகி சமுதாயப் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு அழைத்துச் செல்லும் போது மணிப்பூர் காவல் துறை அதிகாரிகள் வேடிக்கை பார்த்தார்கள்" என்று சி.பி.ஐ. தனது குற்றப்பத்திரிக்கையில் சொல்லி இருக்கிறது. அசாம் மாநிலம் குவாஹாட்டி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தச் சம்பவம் நடந்தபிறகு, அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன்சிங் மீது எந்த நடவடிக்கையும் பா.ஜ.க. தலைமை எடுக்கவில்லை. பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களே அவர் மீது புகார் சொன்னார்கள். அதன் பிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை. 'இது போல பல சம்பவங்கள் நடந்துள்ளது' என்று, பிரேன்சிங் சொன்னதையும் பார்த்தோம். தன்னை பா.ஜ.க. தலைமை ஏதும் செய்யாது என்று பிரச்சினையை அப்படியே விழுங்கப் பார்த்தார் பிரேன்சிங். ஆனால் பிரச்சினை, ஓராண்டு காலமாக அப்படியேதான் இருக்கிறது.

மைத்ரி – குகி ஆகிய இரு சமூகத்தினர் இடையிலான மோதலை மாநில பா.ஜ.க. அரசாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசாலும் நிறுத்த முடியவில்லை. இரு சமூகத்தைச் சேர்ந்த தீவிர அமைப்பினரும் தொடர்ந்து மோதிக் கொண்டே இருக்கிறார்கள். இதுவரை 200 பேர் மரணம் அடைந்துள்ளார்கள். இரண்டு தரப்பும் துப்பாக்கி வைத்துள்ளது. நேருக்கு நேராக துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடுகிறார்கள். இதன் உச்சகட்டமாக, ட்ரோன் மூலம் குண்டுகள் வீசுவது தொடங்கி உள்ளது. இராணுவத்தில் இருக்கும் ராக்கெட் லாஞ்சுகளையும் பயன்படுத்துகிறார்கள். இதை வைத்து நடத்திய தாக்குதலில் சில வாரங்களுக்கு முன் 8 பேர் கொல்லப்பட்டார்கள்.

காங்போக்பி மாவட்டத்தில் ஆயுதம் ஏந்திய இரு தரப்புக்கும் இடையே இரண்டு நாட்களுக்கு முன் ஏற்பட்ட சண்டையில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு தரப்பும் வெடிகுண்டுகளை வீசி இருக்கிறார்கள். வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. ஊருக்குள் இருந்த மக்கள் காட்டுக்குள் போய் பதுங்கி விட்டார்கள். இப்படி பல மாவட்டங்களில் சம்பவங்கள் தொடர்ந்து நடக்கின்றன.

எப்போது எந்தப் பக்கம் இருந்து யார் ராக்கெட் லாஞ்ச் ஏவுவார்கள் என்ற பதற்றத்தோடு மணிப்பூர் இருந்த நிலையில், மாணவர் போராட்டம் தொடங்கி விட்டது.

மணிப்பூரில் அமைதியை மீட்டெடுக்கத் தவறிய காவல் துறை தலைமை இயக்குநர் ராஜீவ் சிங், மாநில அரசின் பாதுகாப்பு ஆலோசகர் குல்தீப் சிங் ஆகியோரை பதவி விலகச் சொல்லி ஆளுநர் மாளிகையை நோக்கி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், கடந்த 10ஆம் தேதி அன்று ஊர்வலம் போனார்கள். இதில் பெண்களும் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். அவர்களை பாதுகாப்புப் படை தடுத்து நிறுத்தி இருக்கிறது. இரு தரப்புக்கும் மோதல் ஏற்பட்டு 40 பேர் காயம் அடைந்துள்ளார்கள். உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டுள்ளது.

மாநில பா.ஜ.க. அரசுக்குத் தெரிந்த ஒரே நடவடிக்கை, இணைய தள சேவையை முடக்குவது ஆகும். மோதல்கள் அதிகம் ஆனதும் மணிப்பூர் முழுவதும் இணைய தள சேவையைத் துண்டித்து விட்டார்கள். இம்பால் மேற்கு, கிழக்கு ஆகிய மாவட்டங்களில் முழு ஊரடங்கு போடப்பட்டுள்ளது. தௌபால் மாவட்டத்தில் ஆட்கள் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. மீண்டும் மணிப்பூர், மயான பூமியாக மாற்றப்பட்டு வருகிறது.

**இதன் பிறகுதான் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார் மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங். 'எங்கள் மாநிலத்தில் ஒற்றுமையை, அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுங்கள்' என்று சொல்லி இருக்கிறார். ஆளுநரை அமைச்சர்களுடன் போய் பார்த்திருக்கிறார் முதலமைச்சர். அதன்பிறகும் ஒன்றிய அரசிடம் இருந்து மிகப்பெரிய உதவி வந்ததாக வெளிப்படையாகத் தெரியவில்லை. தெரிவிக்கப்படவில்லை. வரம்பு மீறிய வன்முறைக்கு தயாராகவே மணிப்பூர் இருக்கிறது.**

**இந்த லட்சணத்தில் ரஷ்ய – உக்ரைன் போரை தடுக்கப் போகிறார்களாம். வெட்கம்! வெட்கம்!**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் முதலீட்டில், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அந்நிறுவனத்தின் தற்போதுள்ள கட்டுமான கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, கேட்டர்பில்லர் நிறுவனத்தின் இயக்குநர் புவன் அனந்தகிருஷ்ணன், முதுநிலை துணைத் தலைவர் கெர்க் எப்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# 'உங்களில் ஒருவன்' கடிதம் !

## முதல் பக்கத் தொடர்ச்சி

மாவட்டங்களில் முழுமையாக நிறைவு பெற்றிருக்கின்றன.

**பொது உறுப்பினர்கள் கூட்டங்களில், தொண்டர்களின் ஆழ்மனக் கருத்துகள் அடிவயிற்றிலிருந்து வெளிப்பட்ட குரலாக ஒலித்ததையும், கழகத்தின் தலைவர் என்ற முறையில் நான் கவனிக்கத் தவறவில்லை. தொண்டர்களின் குரலில் ஒலிக்கும் நியாய உணர்வுக்கு மதிப்பளிக்கத் தலைமை தவறுவதில்லை என்ற உறுதியை உங்களில் ஒருவனாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

எளிய தொண்டர்களின் இயக்கமான தி.மு.கழகத்தின் பவள விழாக் கொண்டாட்டம் என்பது தலைமைக் கழகத்திற்கும், மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர், கிளைக் கழகங்களுக்கும் மட்டும் உரியதன்று. நம் உயிர்நிகர் தலைவராம் முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் ஒவ்வொருவருக்கும் உரியது. உணர்வுப்பூர்வமான அவர்களின் கொண்டாட்டத்தால்தான் பவளவிழா சிறக்கும் என்பதால், தமிழ்நாட்டில் உள்ள கழகக் கொடிக்கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, இரு வண்ணக் கொடியேற்றப்பட வேண்டும் என உங்களில் ஒருவனாக – இயக்கத்தின் தலைவனாக நான் அன்புக்கட்டளை விடுத்ததோடு, ஒவ்வொரு உடன்பிறப்பின் வீட்டிலும் கழகக் கொடியை ஏற்றிட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தேன்.

செப்டம்பர் 17-க்கு முன்பாகவே கழகத் தொண்டர்களின் வீடுகளில் இருவண்ணக் கொடிகள் பறக்கத் தொடங்கி விட்டதையும் அறிந்துகொண்டேன்.

**உள்ளத்தில் பதிந்துவிட்ட கொள்கை உணர்வே இல்லத்தின் அடையாளமாகக் கொடிகட்டிப் பறக்கின்ற அழகை தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் காண முடிகிறது. இந்த இருவண்ணக் கொடிதானே, உண்மைத் தொண்டர்களின் உயிருடன் கலந்த உணர்வு!**

**தமிழ்நாடு முழுவதும் தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாக்களும், கழகத்தின் பவளவிழாவும் பல நிகழ்வுகளாகக் கொண்டாடப்படும் நிலையில், தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று அதனை மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடும் பொறுப்பினை சென்னை தெற்கு மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறது தலைமைக் கழகம். மாவட்டக் கழகச் செயலாளரும் மாண்புமிகு மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான திரு.மா.சுப்பிரமணியன் மாரத்தான் ஓட்டம்போல ஓய்வின்றித் தொடர்ச்சியாக நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் பிரம்மாண்ட ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.**

சென்னை தெற்கு மாவட்டத்தின் சார்பில் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடத்தப்பட்ட கழக விழாக்கள் அனைத்தும் வரலாற்றுத் திருப்பங்களாக அமைந்திருக்கின்றன. கோடிக்கணக்கான உடன்பிறப்புகளைக் கண்ணீர்க் கடலில் தவிக்கவிட்டு, வங்கக் கடல் மணல் பரப்பில் தன் அண்ணன் அருகே ஓய்வெடுக்கச் சென்ற முத்தமிழறிஞர் கலைஞருக்கு அகில இந்தியத் தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தும் கூட்டம் நடைபெற்றது நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில்தான்.

கழகத்தின் போர்வாளும் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையுமான முரசொலியின் பவள விழா பொதுக்கூட்டம் கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் நடைபெற்றது. நம் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற அந்தக் கூட்டம்தான் தமிழ்நாட்டில் இன்றளவும் வலிமையாக உள்ள கூட்டணிக்குக் கால்கோள் விழாவாக அமைந்தது. அது, 2019 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. அதன் நன்றி அறிவிப்புக் கூட்டம் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில்தான் நடைபெற்றது.

அதே நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட, உங்களில் ஒருவனான என்னுடைய 70-ஆவது பிறந்த நாளில் வடமாநிலத் தலைவர்கள் வாழ்த்திப் பேசிய விழாவில்தான், இன்றைய 'இந்தியா' கூட்டணிக்கு அச்சாரமிடப்பட்டது. அது வலிமைமிகு எதிரணியாக நாடாளுமன்றத்தில் இன்று அமர்ந்து, இந்திய மக்களை பேராபத்திலிருந்து காத்து நிற்கிறது.

நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி மகளிரணி சார்பில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் அன்புத் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னெடுப்பில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கருத்தரங்கத்தில் அன்னை சோனியா காந்தி, திருமிகு பிரியங்கா காந்தி உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த பெண் தலைவர்கள் பங்கேற்று, தலைவர் கலைஞரின் மகளிர் நலன் காக்கும் திட்டங்களையும், மகளிர் உரிமை காப்பதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பையும் எடுத்துரைத்தார்கள்.

இப்படி பல சிறப்புகள் கொண்ட இடத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா பொதுக்கூட்டம் செப்டம்பர் 17-ஆம் நாள் எழுச்சிகரமாக நடைபெறவிருக்கிறது. இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் சிறப்பான ஏற்பாடுகளை முனைப்பாக மேற்கொண்டு வரும் சென்னை தெற்கு மாவட்டக் கழகத்துடன் மற்ற மாவட்டக் கழகத்தினரும் இணைந்து நின்று, சென்னை மாநகரத்திற்குள் வங்கக் கடல் புகுந்ததோ என எண்ணுகிற அளவுக்கு உடன்பிறப்புகளின் கறுப்பு-சிவப்புக் கடலாகப் பவளவிழாக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

**1949-ஆம் ஆண்டு வடசென்னை இராயபுரம் பகுதியில் உள்ள ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் பொதுக் கூட்டத்தை நடத்தினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். 75 ஆண்டுகள் கழித்து, தென்சென்னையில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா நிறைவுப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இந்த 75 ஆண்டுகாலத்தில், தெற்குதான் வடக்கிற்கு வழிகாட்டுகிறது என்கிற அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைத் தாக்கம் நாடு முழுவதும் பேசப்படுகிறது. 'திராவிட மாடல்' என்பது இந்திய மாநிலங்கள் பின்பற்றும் கோட்பாடாக மாறியிருக்கிறது.**

**கடல் கடந்து – கண்டங்கள் தாண்டி – பல்லாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்து இந்தக் கடிதத்தை எழுதும்போது, ஒரு மகத்தான ஜனநாயகப் பேரியக்கத்தின் தலைவர் என்ற பொறுப்பை உடன்பிறப்புகளாம் நீங்கள் ஒருமனதாக என்னை நம்பி ஒப்படைத்திருக்கிறீர்கள் என்ற பெருமித உணர்வையும், பொறுப்பின் சுமையையும் உணர்கிறேன்.**

1957-ஆம் ஆண்டு தி.மு.கழகம் முதன் முதலாகப் பொதுத் தேர்தல் களத்தைச் சந்தித்தபோது வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளில் உள்ள தூதரகங்களில் தமிழ் தெரிந்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்றும், அந்தந்த நாடுகளில் உள்ள தமிழ்த் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இன்றும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் உலக நாடெங்கும் வாழ்கிறார்கள். உடலுழைப்புத் தொழிலாளர்களாக மட்டுமல்ல, உயர்கல்வி கற்று, அதனால் அயல்நாடுகளில் உயர்பொறுப்புகளைப் பெற்றவர்களாக, நல்ல ஊதியம் பெறக்கூடியவர்களாகத் திகழ்கிறார்கள். பேரறிஞர் அண்ணா தொடங்கி வைத்த திராவிட இயக்கத்தின் ஆட்சியினால், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத் திட்டங்களால் இத்தகைய வாய்ப்புகளைப் பெற்று அயல் நாடுகளில் பணியாற்றும் அவர்களின் நலன் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் அயலக நலத் துறை உருவாக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியில்தான். அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டதும் திராவிட மாடல் ஆட்சியில்தான்.

**அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாகத் தமிழ்நாடு – அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்களின் நலன் காக்கும் வாரியம் என உலகத்தில் தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் நம்பிக்கைக்குரிய இயக்கமாக – அவர்களின் நண்பனாகத் தோழனாகத் திகழ்கிற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.** இதுதான் 75 ஆண்டுகாலப் பயணத்தின் சாதனை. இந்த வெற்றிப் பயணம் தொடர்ந்திட, செப்டம்பர் 17 அன்று வரலாற்றுப் பெருவிழாவான கழகத்தின் பவள விழாவில் படையெனத் திரண்டு, கொண்டாடி மகிழ்வோம்.

இது உங்களில் ஒருவனான என்னுடைய அழைப்பு மட்டுமல்ல; இந்த இயக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணாவும், பேணிப் பாதுகாத்து வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞரும் நம்மை அழைக்கிறார்கள்! அணி திரள்வோம்! பணி தொடர்வோம்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
ஆவணி 28
13-09-2024.